IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:31/2017

**DEP OF WITNESS: PW4**

NAME : Sankaran RELIGION:

FATHER NAME: CASTE:

VILLAGE: OCCUPATION:

TALUK: AGE:

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 11-01-2019

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது கல்லப்பாடி கிராம நிர்வாக அதிகாரியாக கடந்த 2016-ம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றதிலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். சாட்சி சம்மனில் கேட்கப்பட்ட கல்லப்பாடி கிராம சர்வே எண்.253/4எ, சர்வே எண்.253/4இ, சர்வே எண்.253/4எப், சர்வே எண்.253/4ஜி, சர்வே எண்.253/3 ஆகிய சொத்துக்களுக்குரிய அ பதிவேடு, சிட்டா, நடப்பு ஆண்டிற்குரிய அடங்கல் கணக்குகள் ஆஜர் செய்கிறேன். மேற்படி சொத்துக்களுக்குரிய அ பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. கணினி சிட்டா சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. 1427 பசலி ஆண்டிற்குரிய அடங்கல் கணக்கு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. சர்வே எண்.253-க்கு உண்டான நிலபுல வரைபடத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி சான்றாவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. சர்வே எண்.253/3 ஆனது எங்களுடைய வருவாய் பதிவேட்டின் படி வனத்துறை புறம்போக்காக உள்ளது. அந்த சர்வே எண்.253/3-ல் பள்ளிக்கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அந்த பள்ளிக்கூடத்தை சுற்றி சுற்றுச்சுவர் காம்பவுண்ட் கட்டப்பட்டுள்ளது. அந்த பள்ளியின் காம்பவுண்ட் சுவரை ஒட்டினாற்போல் குடியாத்தம் - சித்தூர் செல்லும் மெயின்ரோடிலிருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து பின்பு தென்வடலாக வழி பாதை செல்கிறது. அந்த சர்வே எண்.253/3-ல் உள்ள வழிபாதையை பொறுத்து தனிப்பட்ட நபருக்கு யாருக்கும் இதுவரை பட்டா எதுவும் கொடுக்கப்படவில்லை அது புறம்போக்கு இடமாக தான் இருந்து வருகிறது. அந்த வழி பாதையை ஊர் மக்கள் அனைவரும் தான் பொதுவில் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த வழிபாதை இடத்தை பொறுத்து இது நாள் வரை யாரும் பட்டா கேட்டு மனு எதுவும் கொடுக்கப்படவில்லை. அநத வழிபாதை இனறைய தேதி வரையில் வனத்துறை புறம்போக்கு இடமாக தான் இருந்து வருகிறது. அந்த வனத்துறைக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தை பொறுத்து தனி நபர்கள் யாரேனும் ஆவணங்கள் ஏற்படுத்தி இருந்தால் அது சட்டப்படி தவறு.

<u>குறுக்கு விசாரணை:-</u>

நான் சொன்ன வழிபாதையில் வண்டிகள் செல்ல முடியுமா என்றால் முடியாது அதில் தற்பொழுது முட்செடிகள், ஆக்கிரமிப்புகள் உள்ளதால் வண்டிகள் செல்ல முடியாது. அந்த வழி பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் பெயரை அடங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சொல்லும் அந்த வழிபாதையானது யாருக்காக வேண்டி விடப்பட்டுள்ளது என்றால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வேண்டி வழிபாதையாக விடப்பட்டுள்ளது. வாதி, பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்திற்கு வருவதற்கு இந்த வழிபாதையை தவிர வேறு வழிபாதை உள்ளதா என்றால் ஓடை புறம்போக்கு வழியாக சுற்றிக்கொண்டு வரலாம். அந்த ஓடை புறம்போக்கு வழியாக ஊர்பொதுமக்கள் அனைவரும் சென்று வருகிறார்கள். அந்த கானாற்றில் பக்கத்து நிலத்துக்காரர்கள் தண்ணீர் எடுப்பதற்காக வேண்டி மோட்டார் அமைத்துள்ளார்கள், சுடுகாட்டிற்கு செல்ல வேண்டி வழி பாதையும் உள்ளது. சர்வே எண்.254 சொத்தானது வனத்துறை புறம்போக்கு சொத்தாக உள்ளது, அந்த சொத்தில் பவுனம்மாள், நடராஜன், ராமலிங்கம் ஆகிய மூவரின் அனுபவத்தில் உள்ளது. அது விவசாய நிலமாகவும் பயன்படுத்தி வருகிறார்கள். அதில் நடராஜ் ஒரு வீடும் கட்டியுள்ளார். சர்வே எண்.253/4ஜி சொத்தானது நடராஜன் பெயரில் பட்டா எண்.188 உள்ளது. சர்வே எண்.253/4இ, 4எப் சொத்துக்கள் பவுனம்மாள் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

Sd/- SANKARAN (PW4)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 11.01.2019.
District. Munsif.